முதுமுனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் 6,
நிர்மலா நகர்,

தஞ்சாவூர்.
19.12.2017

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழகம் முழுவதும் திகழும் பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகரர், மற்ற குறுநில வேந்தர்கள் படைத்த

ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் திகழும் ஆயிரக்கணக்கான நாட்டிய சிற்பங்களைக் கண்டு கண்டு அவை ஒரு நாள் உயிர்பெற்றெழுந்து நம்முன் ஆடாவா? எனக் கற்பனையில் நினைத்ததுண்டு. கடந்த டிசம்பர் மாதம் 16ஆம் நாள் தஞ்சாவூர், தென்மண்டல பண்பாட்டு மையத்து ஆடலரங்கில் திருமதி பாலாதேவி சந்திரசேகர் அவர்களின் நாட்டிய நிகழ்ச்சியை நேரில் கண்டுகளித்தபோது தஞ்சை இராஜேராஜேச்சுரத்தில் சிவபெருமானே ஆடிக்காட்டும் நாட்டிய கரணங்களையும், குடந்தை சார்ங்கபாணி கோபுரத்தில் குகேசன் ஆடும் கரணங்களையும், தில்லைக் கோயிலில் ஆரணங்குகள் ஆடும் அனைத்துக் கரணங்களையும் அதே நேர்த்தியில், அதே பாவத்தில் இரண்டு மணி நேரத்தில் ஒரே இடத்தில் காணும் பாக்கியம் பெற்றேன்.

தேவரடியாள் பெண் ஒருத்தியின் பக்திப் பரவசம், ஆடற்கலையில் அவளுக்கிருந்த அத்தனை நெளிவு சுழிவுகள், தன்னையே சிவனார்க்காக அர்ப்பணிக்கும் அவள் தன் உள்ளக் கிடக்கை ஆகிய அனைத்தும் அன்று மேடையில் மிளிர்ந்ததைக் கண்டேன். தஞ்சைப் பெருங்கோயிலின் மிகு சிறப்புகள் ஒருங்கே தொகுக்கப்பெற்று அரங்கத்தில் ஆடல் வடிவில் காட்சி பெற்றன. அந்த ஆரணங்குடன் நாமும் உடன் சென்று கட்டுமானச் சிறப்பு, சிற்பங்களின் நேர்த்தி, ஓவியங்களின் சீர்மை, அனைத்திற்கும் மேலாக பரசிவ தத்துவம் ஆகியவை அறிந்து பரமேட்டியைச் சேவிக்கும் பேறு பெற்றோம். பரத கலைவாணி பாலாதேவி அவர்களின் இப்படைப்பிற்கு ஆதார சுருதியாய்த் திகழும் திரு சந்திரசேகர் அவர்களையும், பின்புலத்தில் பணி செய்த இசை, நாட்டியக் கலைஞர்களையும், தொழில்நுட்ப வல்லுநர்களையும் பாராட்டுவதற்கு எல்லை ஏது? நான் பண்டைய அரசனாக இருந்திருந்தால் திருமதி பாலாதேவி என்ற அந்த நாட்டியத் தாரகைக்கு “மாணிக்கம்” என்ற விருதளித்து சோழர் மரபொற்றி நமசிவாய நாமம் பொறிக்கப்பெற்ற பொன்னாலாகிய சிவனார் சேவடிகளைத் தக்கோர் மூலம் தலைமீது சூட்டச் செய்து மகிழ்ந்திருப்பேன்.